# Feminism of the Eighth Edition

**Dr T. Jaisree**
*Assistant Professor, Department of Tamil Language*
*Thiruthangal Nadar College, Chennai*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358766

**Abstract**

*The Eighth Editions are an important part of Sangam period Tamil literature. They include eight books namely Natrinai, Kurunthokai, Aingurunuru, Pathitruppattu, Paripadal, Kalithokai, Akananuru, and Purananuru. These books depict the lives of women, their feelings, social status, and culture. Feminism is the concept of women's rights, equality, and their social, economic, and political rights. In the Eighth Editions, women are depicted in various forms as leaders, mothers, lovers, and heroes. This collection of essays examines the female characters found in the Eighth Editions, their social status, culture, and ideas about feminism. This study summary discusses the ideas of feminism in the eight volumes of books, the depictions of women's lives, social status and culture. This study summary will serve as a starting point for the study of feminism in the eight volumes of books.*

***Keyword:*** *Tamil Literary Grammar, Feminism*

**References**

1. Tholkappiyam, No. 115, Text by Ilampooranar, Kazhagam Publications, Chennai.
2. Purananuru Moolamum Ulayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai. Thirukkural, Parimelazhagaar, p-38.
3. Tholkappiyam, Karpiyal, No. 3
4. Kurunthokai Moolamum Ulayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai.
5. Aingurunuru Moolam Uthayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai.
6. Akananuru Moolam Uthayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai.
7. Natrinai Moolam Uthayum, New Century Book House Private Limited, Ambattur, Chennai -
8. Patitrupattu Moolam Uthayum, Alice. A , p:168

# எட்டுத்தொகை நூல்களில் பெண்ணியம்

***முனைவர் து. ஜெய்ஸ்ரீ***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சென்னை

*இயற்கையின் படைப்பில் சிறப்பு வாய்ந்தது பெண் படைப்பாகும். பெண் இடம் பெறாத இலக்கியம் இல்லை. பெண்மையினைப் போற்றாத புலவர்களோ கவிஞர்களோ இல்லை எனலாம். பெண்ணியத் தோற்றச் சிந்தனைகளின் அடிப்படையில் கூறினால், பெண்ணியம் என்பது ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கம், பகுத்தறிவு இயக்கம் இவற்றை எல்லாம் உள்ளடக்கிய இலக்கிய இயக்கம் எனலாம். தமிழகத்தில் பெண்கள் சங்க காலத்தில் வாழ்ந்தவர்களைப் போன்று தன்னிகரின்றித் தலை நிமிர்ந்து தாயகம் போற்றி வாழ்ந்திட வேண்டும். "பெண்ணின் பெருந்தக்க யாவுள' என்ற வள்ளுவரின் வரிகள் பெண்ணுக்குச் சிறப்பு சேர்கிறது. சங்க காலத்து பெண்களின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை சரியாக அறிய எட்டுத்தொகை நூல்களில் இடம் பெறும் பெண்களின் நிலையை அறிந்து கொள்வது அவசியம். எனவே "எட்டுத்தொகை நூல்களின் பெண்ணியம்" என்ற கட்டுரைத் தலைப்பு எடுத்தாளப்பட்டுள்ளது.*

## பெண்ணியம்

பெண்மை என்பது பெண்ணின் இயல்புகளைக் குறிக்கிறது. பெண்களுக்கே உரிய பண்புகளாக அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவையே பெண்மை எனச் சங்க இலக்கிய நூல்களுள் குறிப்பிடக் காணலாம். தொல்காப்பியத்தில்,

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான[1]** **தொல். பொருள். நூ.115**

என்ற நூற்பா வழி பெண்மை என்பது அடக்கம், அமைதி, நேர்மை, சொல்வன்மை, நல்லறிவு, பிறர் அருமை எனக் கூறுவது பெண்ணின் இயல்புகளையே குறிக்கிறது.

## பெண்மையின் வீரப்பண்பு

சங்க இலக்கியங்கள் உணர்த்தும் கருத்துக்களைக் கொண்டு சமுதாய அமைப்பில் பெண்களின் நிலை இருந்ததை உணர முடிகின்றது. சங்க கால பெண்களை கற்புடைய மகளிர், கற்பில்லா மகளிர் (பரத்தையர்), கணவனை இழந்த மகளிர் என்று வேறுபடுத்துகின்றனர். எட்டுத் தொகை நூலான புறநானூற்றில் இடம் பெறும் பெண்ணை "மூதில் மகள்" என்றுரைத்தனர். அதாவது,

பெண்ணின் வீரத்தையும், தியாகத்தையும் குறிப்பிட்டு அப்பெயர் சூட்டினார்கள்.

**"ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே"[2]** ***(புறம். 297)***

என்ற வரியின் பொருள்,

ஒரு தாய் தன் ஒரே மகனை, தந்தை மற்றும் கணவனைப் போரில் இழந்த நிலையிலும், நாட்டைக் காக்க போர்முனைக்கு அனுப்பி வைக்கும் வீரம் செறிந்த செயல் ஆகும், இதனைக் காணுகையில் பெண்களின் மன வலிமையும் வீரப் பண்பும் புலப்படுகிறது.

**பெண்மையின் இல்லறப் பண்பு**

***அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது[3] (குறள் : 45)***

என்று இல்லற வாழ்வில் தலைவனும் தலைவியும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்பும், பண்பும் உடையவர்களாக வாழ வேண்டும். அதுவே இல்வாழ்க்கை என்பார் திருவள்ளுவர். தொல்காப்பியரோ,

***விருந்து புறத் தருதலும் சுற்றம் ஓம்பலும்***
***பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்[4]***
***(தொல். கற்.11)***

தலைவியின் பண்புகளான விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தாரைப் பேணுதல் போன்ற குணங்களைக் குறிக்கும்; இவை கற்பு, காமம், பொறை, நிறை போன்ற தலைவியின் சிறந்த மாண்புகளாகும், இவை அவளது ஒழுக்கத்தையும் கணவனிடம் காட்டும் அன்பையும் வெளிப்படுத்துகின்றன என்று தொல்காப்பியத்தில் உரைத்தார். அப்படிப்பட்ட இல்லால் பண்புகளைப் பெண்கள் பெருமையுடன் ஏற்று ஒழுகினர்.

***நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆரளவின்றே சாரல்***
***கருங்கோல் குறிஞ்சிப் பூக் கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே[5]***
***(குறுந். 3)***

என்ற குறுந்தொகை பாடல் மூலம் தலைவி தன் தலைவனிடம் கொண்டுள்ள நட்பு இந்த உலகம் எவ்வளவு பரந்து விரிந்ததோ அந்த அளவிற்கு உயர்ந்தது என்று கூறுவது வியக்கத்தக்கது.

**பெண்மையின் வாகைப் பண்பு**

சங்ககாலத்தில் புறவாழ்வு ஆணுக்கு உரியது. அகவாழ்வு பெண்ணுக்கும் ஆணுக்கும் உரிய காதல் வாழ்வு. ஆணுக்கே உரிய வீரம் முதலிய புறவியல் வாழ்வில் பெண் தலையிடல் கூடாது என்பது சங்க கால சமுதாய நெறி. இச்சமுதாய சட்டத்தை நன்கு உணர்ந்த சங்க கால மகளிர் தங்களுக்குரிய அகவாழ்வைச் செம்மையாக வாழும் பொருட்டு அதற்குரிய ஆளுமைத் திறனை வளர்த்துக் கொண்டு அதில் வாகை சூடினர் என்பதனை,

***தேன் மயங்கு பாலினுமினிய அவர்நாட்டு***
***உவலைக் கூவற்கீழ்***
***மானுண்டு எஞ்சிய கலுழி நீரே[6]***
***(ஐங்குறு. 203)***

என்று ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. அதாவது, தலைவனிடத்தும் தலைவன் வீட்டாராகிய சுற்றத்தாரிடமும் தலைவி கொண்ட மிகையான அன்பால் அவருக்கு தலைவன் வீட்டில் மானுண்டு எஞ்சிய கலங்கல் நீரையே பெற்ற போதும் அவள் தாய் வீட்டில் உண்ட தேனையும் பாலையும் விட உயர்ந்த சுவையுடையதாயிற்று என்பதால் இல்லறமாகிய காதல் வாழ்வில் இவளை வெற்றி கொள்ள யாரால் முடியும்.

**பெண்மையின் காதல் பண்பு**

***அணிற் பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து***
***மணிக்கேழ் அன்ன மாநீர் சேர்ப்ப***
***இம்மை மாறி மறுமை ஆயினும்***
***நீ ஆகியர் என் கணவனை***
***யான் ஆகியர் நின்நெஞ்சு நேர்பவளே[7]***
***(குறுந். 49)***

என்ற குறுந்தொகை பாடல் வழி பெண்மையின் காதல் பண்புப் புலப்படுகின்றன. அதாவது, தலைவனுடன் இணைந்த மகிழ்ச்சியில், தலைவி தனது ஆழமான அன்பை வெளிப்படுத்துகிறாள். அணில் பல் போன்ற முள்ளுடைய முள்ளிப் பூக்களையும், நீலமணியின் நிறத்தையொத்த கரிய கடலையும் கொண்ட நெய்தல் நிலத் தலைவனே, இந்த பிறவியில் மட்டுமல்ல, மறுபிறவிகளிலும் நீயே என் கணவனாக வர வேண்டும், நானும் உன் நெஞ்சில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும் என்று தலைவி தன் காதலை உறுதிப்படுத்துகிறாள். இங்கே நெஞ்சு நேர்பவள் என்றப் பட்டத்தைப் பெறுகின்றாள்.

**பெண்மையின் துயர் நிலைப்பண்பு**

***...................... யானே***
***காதலர் கொடுத்த சிறுமையோடு நோய்கூர்ந்து***
***ஆதிமந்தி போல பேதுற்று***
***அயந்தனென் உழல்வென் கொல்லோ[8]***
***(அகம்.45)***

என்ற அகநானூற்றின் பாடல் வரியானது தலைவனின் பிரிவால் மெலிந்துபோய்விட்ட தன் மேனியையும் அதற்குரிய காரணம் என்னவாயிருக்கும் என்று ஊரார் ஆளாளுக்குப் பேசும் ஏளனப் பேச்சையும் எண்ணி கவலையுறுகிறாள். ஒருவேளை தலைவன் வராமலே போய்விட்டால் அவனை எங்கெங்கே போய்த் தேடுவது - ஆற்றுவெள்ளம் ஒரு காதலனை அடித்துக்கொண்டு சென்று விட, அவனது காதலியாகிய ஆதிமந்தி கரையோரமாகவே சென்று அவனைத் தேடித்திரிந்தது போலத் தன் பிழைப்பும் ஆகிவிடுமோ என்று தலைவி அஞ்சு கிறாள் என்பதை காணுகையில் பெண்மையின் துயர்நிலை புலப்படுக்கின்றது.

## பெண்மையின் அவலப் பண்பு

தலைவனை நினைத்து வருந்தும் தலைவிக்கு தோழி தலைவனின் குணம் எப்படிப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாக நற்றிணைப் பாடலைச் சுட்டுகிறாள்.

**வேந்தர் ஒட்டிய ஏந்துவேல் நன்னன்**
**கூந்தலை முரற்சியின் கொடிதே**
**மறப்பல் மாதோ நின் விறந் தகைமையே[9]**

(நற்.270)

பகைவரை வென்ற நன்னன், பகைமன்னர் மகளிரின் கூந்தலை திரித்து கயிறு செய்தது போல, தலைவனும் கொடியவன் என, அவன் செயல்களின் அடிப்படையில் தலைவியை பிரிந்து வருந்துவதை தவிர்க்க அறிவுறுத்துவதாக இருந்தாலும், பெண்மைக்கு இழைக்கப்படும் கொடுமையான அவல நிலைத் தென்படுகின்றது. இதுப் போன்று பதிற்றுப்பத்தில், பழையன் என்பவன் மோகூர் குறு நில மன்னன். பழையனை அழித்து அவன் கொண்டிருந்த வேப்ப மரத்தை வெட்டி வீழ்த்திய செய்தி ஒன்று உள்ளது. பழையனின் மனைவிமார் பலர். பல பெண்களின் கணவன் இறந்த பிறகு அப் பெண்களின் கூந்தலைத் திருத்திக் கயிறு உண்டாக்கி யானைகளை இழுக்கும் கயிறாக்கியிருக்கின்றனர் என்பதனை,

**பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்**
**முழாரை முழுமுதல் துமியப் பண்ணி**
**வால் இழை கழித்த நறும் பல் பெண்டிர்**
**பல் இருங் கூந்தல் முயற்சியால்10**

(பதிற்.ப.168)

என்ற அடிகள் சங்க காலப் பெண்களுக்கு இழைக்கப்படும் அவலங்களை வெளிப்படுத்து கின்றன.

## தொகுப்புரை

இவ்வாறு சங்க கால பெண்களின் வீரம், காதல், இல்லறம், துயர்நிலை, அவல நிலை ஆகியவற்றின் மூலம் எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு போன்றவற்றில் இடம் பெறும் பெண்ணியம் அறிய முடிகிறது.

## சான்றெண் விளக்கம்


1. தொல்காப்பியம், நூ. 115 பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, கழக வெளியீடு, சென்னை.
2. புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், அம்பத்தூர், சென்னை.
3. திருக்குறள், பரிமேலழகர், பக்-38.
4. தொல்காப்பியம், கற்பியல், நூ- 3
5. குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடேட், அம்பத்தூர், சென்னை
6. ஐங்குறுநூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடேட், அம்பத்தூர், சென்னை
7. அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடேட், அம்பத்தூர், சென்னை. நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடேட், அம்பத்தூர், சென்னை
8. பதிற்றுப்பத்து மூலமும் உரையும், ஆலிஸ். அ , பக்:168